அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல:06/2008

எனது இல: தா/5/1/26-1
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2008 பெப்ரவரி 06 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

## வாழ்க்கைச் செலவுப் படிகளைப் பல்வேறு முறைகளில் செலுத்துதலைத் திருத்தியமைத்தல்

2006.01.01 ஆந் திகதி தொடக்கம் அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெறுநர்கள் ஆகியோர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி செலுத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள பின் குறிப்பிடும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய நபரொருவரே அரசாங்க அலுவலராக, விதவைகள்/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியம் பெறுநராக / தங்கிவாழ்பவராக, அங்கவீன ஓய்வு பெறுநராக பல்வேறு முறைகளில் ஓய்வூதியம் பெறுபவராக அறிக்கையிடப் பட்டுள்ளது.

I 2006.04.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 6/2006 இற்கு அமைய - 2006.01.01 ஆந் திகதி தொடக்கம் அரசாங்க அலுவலர்களுக்கும் ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் முறையாக ரூ.1000.00 மற்றும் ரூ.500.00.

II 2006.08.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 12/2006 இற்கு அமைய - 2006.07.01 ஆந் திகதி தொடக்கம் அரசாங்க அலுவலர்களுக்கும் ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் முறையாக ரூ.1375.00 மற்றும் ரூ.687.50.

III 2007.01.24 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 02/2007 இற்கு அமைய - 2007.01.01 ஆந் திகதி தொடக்கம் அரசாங்க அலுவலர்களுக்கும் ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் முறையாக ரூ.1750.00 மற்றும் ரூ.875.00.

IV 2007.07.17 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 17/2007 இற்கு அமைய - 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் அரசாங்க அலுவலர்களுக்கும் ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் முறையாக ரூ.2125.00 மற்றும் ரூ.1062.50.

V 2008.01.14 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல:02/2008 இற்கு அமைய 2008.01.01 ஆம் திகதி தொடக்கம் அரசாங்க அலுவலர்களுக்கு ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் முறையாக ரூ.2500.00 மற்றும் ரூ.1250.00 (2008.07.01 ஆம் திகதியிலிருந்து அரசாங்க அலுவலர்களுக்கும் ஓய்வூதியக் பெறுநர்களுக்கும் முறையாக ரூ.2875.00 மற்றும் ரூ.1437.00 வழங்கப்படும்)

02. பல்வேறு முறைகளில் ஒருவரே வாழ்க்கைச் செலவுப்படி பெறுவதாக அறியப்பட்டுள்ளதால், அரசாங்க அலுவலர் ஒருவருக்கு செலுத்தப்படும் மொத்த வாழ்க்கைச் செலவுப்படிக்கு மேற்படும் வாழ்க்கைச் செலவுப்படிக்கு எந்த அரசாங்க அலுவலரும் உரித்துடையவராகார் என தீர்மானிக்கப்பட்டது.

03. மேலே பந்தி 02 இல் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களுடைய சம்பளத்துடன் பெறப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படிக்கு மேலதிகமாக ஏனைய அடிப்படையிலும் வாழ்க்கைச் செலவுப்படியைப் பெறுகின்ற சகல அலுவலர்களிடமிருந்து 2008.03.15 ஆந் திகதிக்கு முன்னர் இணைக்கப்பட்ட இணைப்பு I படிவத்தில் (பிரதி) பிரகடனம் ஒன்றைப் பெறுவதற்கு நிறுவனத் தலைவர்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதன் பின்னர் ஏற்புடைய அலுவலர்களால் ஏனைய அடிப்படையில் பெறப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படிக்கு சமமான தொகை 2008.04.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வண்ணம் அவர்களுடைய சம்பளத்துடன் வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியிலிருந்து கழிப்பதற்கு நிறுவனத் தலைவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இணைப்பு I இல் உள்ள பிரகடனத்தின் பிரதி ஒன்றை ஏனைய அடிப்படையில் ஏற்புடைய அதிகாரிக்கு (ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் /பிரதேச செயலாளர்/ நிறுவனத் தலைவர்) அனுப்பி ஏனைய அடிப்படையில் வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தப்படுகின்றது என உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

04. இதற்கு மேலதிகமாக சேவையிலிருந்து விலகிய பின்னரும் நபரொருவரே கீழ்க் குறிப்பிட்டுள்ள நிலைமைகளின் கீழ் "வாழ்க்கைச் செலவுப் படியை" பல்வேறு சந்தர்ப்பங்களில் பெற்றுள்ளதாக அறியவந்துள்ளது.

(அ) பயங்கரவாத காரணங்களின் பெயரில் அங்கவீனர்களாகும் அலுவலர்கள் 55 வயது வரை சம்பளமும் அங்கவீனம் காரணமாக அங்கவீன ஓய்வூதியமும் அதே போன்று 10 வருட சேவைக்காலம் உள்ளவிடத்து சேவை ஓய்வூதியத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியும் பெறுதல்.

(ஆ) பயங்கரவாத காரணங்களின் பேரில் அல்லது சுனாமி பேரழிவின் பேரில் மரணமடைந்த அலுவலர்களின் துணைகளுக்கு அலுவலரின் வயது 55 பூர்த்தியாகும் வரை கிடைக்கப் பெறும் சம்பளம், விதவைகள், அநாதைகள் ஓய்வூதியமும்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியம் தங்கி வாழ்வோரின் படி என்பனவற்றுடன் வாழ்க்கைச் செலவுப் படியும் பெறுதல்.

(இ) திருமணமாகாத படை அலுவலர் ஒருவர் மரணமடைந்தவுடன் அவர்களின் பெற்றோர்கள், அலுவலர்கள் வயது 55 பூர்த்தியாகும் வரை கிடைக்கப் பெறும் சம்பளமும் தங்கிவாழ்வோருக்கான படியுடன் வாழ்க்கைச் செலவுப் படியும் பெறுதல்.

(ஈ) அரச ஓய்வு பெறுநராக கிடைக்கப் பெறும் ஓய்வூதியம், மரணமடைந்த வாழ்க்கைத் துணைவருக்காக கிடைக்கப் பெறும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியம் என்பவற்றுடன் வாழ்க்கைச் செலவுப் படி பெறுதல்.

05. அதன்படி மேற்படி பந்தி 04 இன் கீழ் ஒரே காலப்பகுதிக்குள் எந்தவொரு அரசாங்க அலுவலருக்கும் வாழ்க்கைச் செலவுப்படியின் மொத்தத் தொகைக்கு மேற்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படலாகாது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே பிரதேச செயலாளர், இணைப்பு 11 படிவத்திற்கமைய தகவல்களைப் பெற்று 2008.04.01 ஆந் திகதியிலிருந்து செயல் வலுப்பெறும் வண்ணம் அரச அலுவலராக உள்ள ஒவ்வொரு அலுவலருக்கும் உரித்துடைய தொகைக்கு மேலதிகமாக பெற்றுள்ள வாழ்க்கைச் செலவுப்படியை கழித்து நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் ஒய்வூதியத்துடன் வாழ்க்கைச் செலவுப் படியும்(வாழ்க்கைச் செலவுப் படியின் மொத்த தொகையின் அரைப்பங்கை) பெறும் ஒய்வூதியம் பெறுநர்கள் வாழ்க்கைத் துணையின் மரணத்தின் காரணமாக பெறும் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஒய்வூதியத்துடன் வாழ்க்கைச் செலவுப்படிகளும் (வாழ்க்கைச் செலவுப்படிகளின் மொத்தத் தொகையில் அரைப்பங்கை) பெறுவதற்கு எவ்வித கட்டுப்பாட்டிற்கும் உட்படமாட்டார்கள். இவ்விடயத்தில் அரசாங்க அலுவலர் ஒருவருக்கு உரித்துடைய வாழ்க்கைச் செலவுப்படியானது எந்த வகையிலும் ஒருவருக்கு உரித்துடைய மொத்த வாழ்க்கைச் செலவுப்படியிலும் அதிகரித்தலாகாது.

06. இது தொடர்பான மேலதிகமான தகவல்கள் தேவைப்படுமாயின் ஒய்வூதிய பணிப்பாளர் நாயகத்தூடாக தொடர்பு கொள்ளும் படி மேலும் அறியத் தருகின்றேன்.

07. பொதுத் திறைசேரியின் ஆலோசனைகளுக்கமைய இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/ டி,திசாநாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

இணைப்பு 1

............................................
............................................
............................................

<u>வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தல்</u>

..........................................................................................................அமைச்சில் /திணைக்களத்தில் ..................................சேவையாற்றும் நான் எனது சம்பளத்துடன் மாதமொன்றுக்கு ..................................ரூபாவை வாழ்க்கைச் செலவுப் படியாக பெறுகின்றேன்.

02. இங்கு மேலதிகமாக எனது கணவரின்/மனைவியின் உரிமைகளின் கீழ்

விதவைகள்/தபுதாரர்கள் அநாதைகள் ஒய்வூதியத்துடன் மாதமொன்றுக்கு ................................ரூபாவை வாழ்க்கைச் செலவுப்படியாக பெறுகிறேன்

அத்துடன்

....................................சார்பாக மாதமொன்றுக்கு.......................ரூபாவை வாழ்க்கைச் செலவுப் படியாக பெறுகிறேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

03. மேற்படி பந்தி 02 க்கு உரிய படி செலுத்தும் நிறுவனம் மற்றும் தொடர் இலக்கம் பின்வருமாறு.

| நிறுவனம் | தொடர் இலக்கம் |
| --- | --- |
| ...................... | ........................... |
| ...................... | ........................... |

கையொப்பம்..................................

: பெயரும் பதவியும்:.........................

திகதி: ......................

...................................................

---

எனது இல: ....................
உமது இல: ....................
திகதி .............................

..............................................................................
.......................................அமைச்சு/திணைக்களம்

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் சரியானவை என சான்றுபடுத்துகிறேன்.

........................................................
பிரதேச செயலாளர்/நிறுவனத்தின் தலைவர்

இணைப்பு 11

பிரதேச செயலாளர்
..........................

<u>வாழ்க்கைச் செலவுப்படி</u>

தற்போது கீழ் குறிப்பிட்டுள்ளவாறு அரசாங்கத்தால் செலுத்தப்படும் வாழ்க்கைச் செலவுப்படி எனக்கு கிடைக்கப் பெறுகின்றதென வெளிப்படுத்துகின்றேன்.

01. பயங்கரவாத காரணங்களின் பேரில் அங்கவீனர்களாகும் படைதாங்கு சேவையின் அங்கத்தவராக.

(அ) சம்பளத்துடன் மாதமொன்றுக்கு ரூபா.........................வாழ்க்கைச் செலவுப்படி

(ஆ) ஓய்வூதியத்துடன் மாதமொன்றுக்கு ரூபா ,,,,,,,,,,,,,,, வாழ்க்கைச் செலவுப்படி

(இ) அங்கவீனர்களுக்கான ஓய்வூதியத்துடன் மாதமொன்றுக்கு ரூபா...................... வாழ்க்கைச் செலவுப்படி

02. பயங்கரவாத காரணங்களின் பேரில் மரணமடைந்த படைத்தாங்கு அலுவலர்களின் துணைகள் மற்றும் பெற்றோர்களாக

(அ) சம்பளத்துடன் மாதமொன்றுக்கு ரூ....................வாழ்க்கைச் செலவுப்படி

(ஆ) விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்துடன் மாதமொன்றுக்கு ரூ.................... வாழ்க்கைச் செலவுப் படி

ஓய்வூதிய இலக்கம்: ..............................

(இ) திணைக்களங்களின் படிகளுடன் நிரந்தரமாக மாதமொன்றுக்கு ரூ................. வாழ்க்கைச்செலவுப் படி

ஓய்வூதிய இலக்கம்: .......................

03. திடீர் இடர் (சுனாமி) காரணமாக மரணமடைந்த அலுவலரின் விதவைகள்

(அ) சம்பளத்துடன் மாதமொன்றுக்கு ரூ..........................

வாழ்க்கைச் செலவுப் படி

(ஆ) விதவைகள்/தபுதாரர்கள்,அநாதைகள் ஓய்வூதியத்துடன் மாதமொன்றுக்கு ரூ..................... வாழ்க்கைச் செலவுப் படி

ஓய்வூதிய இலக்கம்: .....................

(இ) தங்கிவாழ்வோர்களின் படியுடன் மாதமொன்றுக்கு ரூ....................... வாழ்க்கைச் செலவுப்படி.

ஓய்வூதிய இலக்கம்: .....................

04. மரணமடைந்த துணைக்கு செலுத்தப்படும் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஒய்வூதியத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியும் மேலதிகமாக அரசாங்க ஒய்வூதியராக ஒய்வூதியத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியாக ......................ரூபா படி.

..................................................

திகதி:......................                                  பிரகடனப்படுத்துபவரின் கையொப்பம்

பிரதேச செயலாளர் அனுமதி

மேற்படி வெளிப்படுத்தருக்கு 2008.04.01 ஆந் திகதி தொடக்கம் 2008.02.06 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 06/2008 கீழ் உரித்தாகும் வாழ்க்கைச் செலவுப் படி ரூ.................................ஆகும்.

....................   .....................................

திகதி:.................                                  பிரதேச செயலாளர்/ நிறுவனத்தின் தலைவர்